## புனித ஐடா

இவள் மகா சார்லஸ் அரசருடைய காலத்தில் அவரது அரண்மனையில் வளர்ந்து கல்விப் பயிற்சி பெற்றாள். என்றாலும் துறவிகளைவிட இவள் அதிக தவமுயற்சிகள் செய்து வந்தாள் என்று சொல்வார்கள். அரண்மனையிலும், விரும்பினால். யாரும் புனிதராகலாம் என்பதற்கு இவள் சிறந்த எடுத்துக்காட்டு.

கடவுளின் சித்தமே இவளது பெரிய பாக்கியமாக, இருந்தது. அதற்கேற்றபடி சிந்திப்பாள். பேசுவாள். செயலாற்றுவாள். எதுவும் தற்செயலாக நேரிடுவதில்லை. கடவுளது அனுமதியுடனே எல்லாம் நடக்கிறது. கடவுளோ சர்வஞானி, அவரது கரத்தில் இவன் பிள்ளைகளுக்குரிய நம்பிக்கையுடன் தன்னை ஒப்படைத்தாள்.

அடிக்கடி செபித்து பரலோக காரியங்களைப் பற்றிய ஞான நூல்களைப் படிப்பாள். அற்பப் பாவத்தையும் கவனத்துடன் விலக்கி வந்தாள். எக்பேர்ட் என்னும் வாலிப பிரபு இவளை மணமுடித்து இருவரும் அமைதியுடன் திருப்தியாக வாழ்ந்து வந்தனர். அனைத்திலும் ஒருமனப்பட்டிருந்தார்கள். நல்லவர்களாய் வாழ அடிக்கடி செபிக்க, பக்தி முயற்சிகளைச் செய்ய ஒருவர் மற்றவரைத் தூண்டி வந்தனர்.

சிறுவயதிலே இவளுடைய கணவர் இறந்தார். ஐடா வருந்தினாலும் கடவுளின் சித்தத்தை அறிந்து ஆராதித்தாள். அதிலிருந்து இவள் உள்ளத்திலிருந்து உலக நினைவுகளை அகற்றி புனிதையாக வாழ்ந்து வந்தாள். இயேசுவைப் போல் சாந்தமுள்ளவளாக, பொறுமையுள்ளவளாக வாழ்நது இறந்தாள்.

**சிந்தனை:**

கடவுளின் சித்தமே நமது பாக்கியமாக இருக்க வேண்டும். அனைத்திலும் கடவுளது கரத்தைக் காண நாம் முயல்வோம்.

**செபம்:**

ஆண்டவரே, தேவ சித்தத்தை நாங்கள் அறிந்து செயலாற்றும் அரிய வரத்தை எங்களுக்குத் தாரும்.